1974 மார்ச் 6]

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தெய்விகப் பேரவையிலே மனிதத் தெய்வங்கள் கலந்துகொள்கின்றனவா அல்லது தெய்வலோகத்திலே உள்ளவர்கள் கலந்து கொள்கின்றனரா ?

(விடை இல்லை.)

முதியோர் இல்லங்கள்

* 310 வினா.—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி, திருவரங்கம், மயிலை கபாலி ஆகிய கோயில்களின் உபரி நிதியில் இருந்து முதியோர் இல்லங்கள் நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருத்தணி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து மட்டும் முதியோர் இல்லம் ஒன்று ஆரம்பித்து நடத்தும் செயற்குறிப்பு ஒன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின் பரிசீலனையிலிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவையின் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று திரு. செ. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம். அதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்னதாக இந்தத் தீர்மானத்தை நான் படிக்க வேண்டும். தீர்மானத்தைப்படிக்கிறேன் :

'This House resolves that Thiru P. Seenivasan be removed from the office of the Deputy Speaker of the Assembly".

தீர்மானத்திற்கு ஆதரவு ஆக உள்ளவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.

(35 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நின்றனர்.)

THIRU K. T. K. TANGAMANI : Sir, before the Resolution is put to vote . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் போட்டாயிற்று. சட்டப் பேரவை விதி 54 (1)-ன் படி 35 உறுப்பினர்கள் இதற்கு அனுமதி அளித்தாக வேண்டும். 35 உறுப்பினர்களுக்கு மேலாக எழுந்து நின்றிருப்பதால் பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன். பேரவை விதி 54 (1)-ன் படி இன்றோ அல்லது இன்னும் ஏழு நாட்களுக்குள்ளாகவோ அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. தீர்மானத்தின்மீது விவாதம் 12—3—1974 ஆம் நாளன்று காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் நடைபெறும் என்பதை இந்த அவையின் அனுமதியோடு அறிவிக்கிறேன். அடுத்து . . .

4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தில் எவ்விதக் காரணமும் சொல்லப் படாதது குறித்து.

திரு. கே. டி. கே தங்கமணி: நான் முதலிலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணினேன். தீர்மானத்தை மூவ் பண்ணு வதற்கு ஆட்சேபணை கிளப்புவது என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டராகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த பாயின்ட் ஆப் ஆர்டர் முடிந்துவிட்டது. அடுத்து 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் . . .

TRUTH ALONE TRIUMPHS